27



# இளமையும் பணியும்



மனித வாழ்வில் இளமைப் பருவம் முக்கியமான ஒரு காலகட்டமாகும். பிள்ளைப் பருவத்தை அடுத்து ஆரம்பிக்கும் இப்பருவம், பன்னிரண்டு வயது முதல் இருபது வயது வரை நீடிக்கின்றது. இப்பருவத்தில் ஏற்படுகின்ற உடல் வளர்ச்சியும் உள வளர்ச்சியும் ஒருவரின் வாழ்க்கையில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியனவாகும். ஆதலால் இப்பருவத்தை மிகக் கவனமாகவும் ஒழுங்காகவும் அறிவு பூர்வமாகவும் அமைத்துக் கொள்வதன் மூலமே எதிர்காலத்தை ஒளிமயமானதாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

இன்று, இள மையைப் பயன்படுத்துவது தொடர்பான ஆய்வுகளும், அறிவுரைகளும் நிறையக் கிடைக்கின்றன. மனித வாழ்வைச் செம்மைப்படுத்த வந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இளமைப் பருவம் பற்றி விரிவாக விளக்கியுள்ளார்கள். முதுமைக்கு முன் இளமையைப் பயன்படுத்து (ஹாகிம்) என்பது அவற்றுள் முதன்மையானது எனலாம்.

மனித வாழ்வில், இப்பருவத்தில் தான் உடற்பலமும், கால அவகாசமும், சமூகத்தின் ஒத்துழைப்பும், ஆற்றல்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகளும், தடையின்றிக் கிடைக்கின்றன. ஆதலால் தமக்குக் கிடைக்கின்ற இவ்வருள்களை இளைஞர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனவேதான், மறுமையில் விசாரணைக்குட்படுத்தப்படும் நான்கு வினாக்களுள் ஒன்று உனது வாலிபத்தை எவ்வாறு பயன்படுத்தினாய்? என்பதாகும். ‘வேறு எந்த நிழலும் கிடைக்காத மஹ்ஷர் வெளியில் அர்ஷின் நிழலில் தங்குகின்ற வாய்ப்பு பெற்ற ஏழு தொகுதியினரில் ஒரு தொகுதியினராக அல்லாவின் வழிபாட்டில் வளர்ந்த இளைஞர்களும் இருப்பர்’ (முஸ்லிம்) அவர்களுள் எம்மை இணைத்துக்கொள்ள வேண்டுமாயின் வாலிபத்தை சீராக வழிநடத்திச் செல்ல வேண்டும்.

இஸ்லாத்தின் வரலாற்றை நோக்கினால் அதன் வளர்ச்சியில் இளைஞர்களது பங்களிப்பு மிகைத்திருப்பதைக் காணலாம். ஷிர்க்கில் மூழ்கியிருந்த சமுதாயத்தை தவ்ஹீதின் பால் வழிநடத்திய நபி இப்றாஹிம் (அலை) அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. இவர் தனது இளமைப் பருவத்தில், தான் வாழ்ந்த சமூகத்துக்கு அறிவுரைப்புச் செய்த வரலாறு ஸூறா பகராவில் சுட்டிக்காட்டப்படுகின்றது. நபி யூசுப் (அலை) அவர்கள் வாலிப வயதில் கற்பொழுக்கத்தைக் காப்பாற்றிய வரலாறு ஸூறா யூசுபில் எடுத்துக்காட்டப் படுகின்றது. மர்யம் (அலை) அவர்கள் கற்பு காத்த நிகழ்வு ஸூறா மர்யமில் குறித்துக் காட்டப்படுகின்றது. சமூகத்தை அடிமைத்துவத்திலிருந்து விடுவித்த மூஸா (அலை) அவர்களின் வரலாறு ஸூறா அஃராபில் குறிக்கப்படுகின்றது. அரச அத்துமீறலில் இருந்து

தமது ஈமானைப் பாதுகாத்துக்கொண்ட இளைஞர்களின் வரலாறு ஸூறா கஹ்ஃபில் போதிக்கப்படுகின்றது.

நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபித்துவத்தை அடையுமுன்பே முன்மாதிரியான ஓர் இளைஞனாக திகழ்ந்த வரலாறு ஸீறாவில் விளக்கப்படுகின்றது. அவர்கள், தமது இளமைப்பருவத்தை பருவக் கோளாறுகளால் களங்கப்படுத்திக் கொள்ளாமல் மக்களால் பாராட்டப்படும் வகையில் அமைத்துக் கொண்டார்கள். அவர்களின் குணப்பண்புகளும் சீரான செயற்பாடுகளும் அழகான முன்மாதிரிகளும் சமூக ஈடுபாடும் இளைஞருக்கான வழிகாட்டல்களாக அமைந்துள்ளன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நாற்பதாவது வயதில், தான் நபியாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது அந்தப் பண்புகள் அவர்களுக்கு பக்கபலமாக அமைந்தன. அவர்களை ஏற்றவர்கள், ஆதரித்தவர்கள், சூழ்ந்து நின்றவர்கள் அணியில் பெரும்பான்மையினர் இளைஞர்களாகவே இருந்தார்கள். அர்கம் (ரழி), அலி (ரழி), முஸ்அப் (ரழி), ஜஃபர் (ரழி), இப்னு அப்பாஸ் (ரழி), இப்னு உமர் (ரழி), முஆத் (ரழி), ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரழி) என நீண்டதோர் இளைஞர் அணி அவர்களால் ஈர்க்கப்பட்டிருந்தனர். இளமையின் இயல்பறிந்து இந்த இளைஞர்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பயிற்றுவித்து நெறிப்படுத்தியதன் காரணமாகவே இஸ்லாம் என்ற கோட்டையைத் தாங்கி நிற்கும் தூண்களாக அவர்கள் மாறினார்கள். 'வயோதிபர்கள் எல்லாம் என்னைப் பொய்ப்பித்துக் கொண்டிருந்தபோது இளைஞர்களே என்னை விசுவாசித்து உண்மைப்படுத்தினர்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே இவர்களை சிலாகித்துப் பேசினார்கள்.

அந்த இளைஞர்களிடம் காணப்பட்ட ஈமானிய பலம், நேரிய சிந்தனை, ஒழுக்க மேம்பாடு, இலட்சிய வேட்கை, சிரமங்களை எதிர்கொள்ளல், அறிவுத்தாகம், கட்டுப்பாடான வாழ்வு, உழைத்து வாழல், அர்ப்பண சிந்தை போன்ற குணநலன்கள் அடுத்துவரும் சந்ததிகளுக்குப் பாடமாக அமைந்தன.



இவர்களின் அடிச்சுவட்டில் வளர்ந்து வந்த அடுத்த பரம்பரையில் சாதனை படைத்த இளைஞர்களின் பட்டியல் நீளமானது. உன்னத ஆட்சியாளர் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) ஸ்பெய்னை வெற்றி கொண்ட தாரிக் பின் ஸியாத், சிந்துவை வெற்றி கொண்ட முஹம்மத் பின் காசிம், கொன்ஸ்தாந்தி நோப்பிளை வெற்றி கொண்ட முஹம்மத் அல் பாத்திஹ், ஸஹீஹுல் புஹாரியைத் தொகுத்த இமாம் புஹாரி, உஸூலுல் பிக்ஹை வகுத்தளித்த இமாம் ஷாபிஈ அறபு இலக்கண வல்லுனரான இமாம் ஷீபவைஹி தம் இளமைப் பருவத்திலேயே சாதனை படைத்தமை அவதானிக்கத்தக்கதாகும்.

இளமை வாள் போன்றது. அதனை ஆக்கபூர்வமான செயல்களுக்கும் பயன்படுத்தலாம். அழிவுக்கான முயற்சிகளிலும் ஈடுபடுத்தலாம். ஏனெனில், அந்தப்பருவம் எதில் கவர்ச்சியூட்டப்படுகின்றதோ அதன்பால் ஈர்க்கப்படும். அன்று போலவே இன்றும் இளைஞர்களை அழிவுப்பாதையில் இட்டுச் செல்வதற்கான வாயில்கள் நவீனம் எனும் பெயரில் சாதனங்களாகவும், செயற்பாடுகளாகவும் திறந்து விடப்பட் டுள்ளன. திட்டமிட்ட முறையில் கவர்ச்சிகரமாக அழைத்துகொண்டிருக்கின்றன. அழகு சாதனங்கள், அலங்கார வடிவங்கள், சரீர இச்சைக்கான தூண்டல்கள், பொழுதுபோக்குச் சாதனங்களாகவும், செல்வம் திரட்டும் வழிகளாகவும் எடுத்துக்காட்டப்படுகின்றன. ஆக்கபூர்வமாக வழிநடத்தப்பட வேண்டிய இளைஞர் களையும், யுவதிகளையும் அழிவுக்கு இட்டுச் செல்கின்றன.

இந்த நிலையில் இளமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கு மட்டும் உரியதல்ல. சமூகத்துக்கும் இதில் பெரும் பங்குண்டு. இளமையில் ஒன்றிணையும் சகபாடிகள் இளமையைப் பாழ்படுத்துவதில் நிறைய பங்கேற்கின்றனர். நல்ல நண்பர்களையும், நல்ல முன்மாதிரிகளையும் (ஹீரோ) இனங்காண வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கும், இனங்காட்ட வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கும் உண்டு.

இளைஞர், யுவதிகள் தமது இளமைப்பருவத்தை அல்லாஹ்வின் பொருத்தத்துக்கும், மக்களின் விருப்பத்துக்கும் உரியதாக அமைத்துக்கொள்ள வேண்டும். அற்ப இன்பங்களுக்கும், தற்காலிக சுகங்களுக்கும் இடமளிக்காமல் தமது இளமையை இலட்சிய உணர்வோடும் திட்டமிட்ட செயல்களோடும் இணைத்துக்கொள்ள வேண்டும். மனிதன் உடலாலும், அறிவாலும், ஆன்மாவாலும் இயக்கப்படுகின்றான். எனவே, அவை மூன்றும் சமநிலையில் வளர்க்கப்பட வேண்டும்.

இளமைப் பணி, சீராக அமைய வேண்டுமெனில் தெளிவான இலக்கோடும், நிதானமான அணுகுதலோடும் கடுமையாக உழைக்க வேண்டும். தூரநோக்கோடு செயல்பட வேண்டும். விரிவான அறிவு, சீரான ஒழுக்கம், சமூக அபிமானம், தியாக உணர்வு, நல்ல தொடர்பு போன்றவற்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். போலிகளைக் கண்டு மயங்கிவிடக்கூடாது. அற்ப விடயங்களில் நேரத்தை வீணாக்கக் கூடாது. நவீன தொழில்நுட்ப சாதனங்கள் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தப்பட வேண்டும். ஆக்க முயற்சி களுக்கன்றி அழிவு வேலைகளுக்காக திட்டமிடுவதோ, ஒத்துழைப்பதோ, பங்கேற்பதோ தவிர்க்கப்பட வேண்டும்.

இளமையை இனிய வழியில் இட்டுச் செல்வதற்கு ஆதாரமாக அமைவது சமய பக்தியும், சமயத் தொடர்புகளுமாகும். இளமையைத் தீய விளைவுகளில்

இருந்து கட்டுப்படுத்துவதில் இறை பக்தி - தக்வாவுக்கு முதலிடம் உண்டு. அதனை வளர்த்துக்கொள்வதற்காக ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். திக்ர், ஸலவாத், தவ்பா, இஸ்திஃபார், திலாவதுல் குர்ஆன், ஸுன்னத்தான தொழுகைகள் போன்றவற்றுக்காக தினமும் நேரம் ஒதுக்கப்பட்ட வேண்டும். வாசிப்பதிலும், கற்பதிலும் அதிக நேரத்தை செலவிடுதல் வேண்டும். நல்லவர்களோடு சேர்ந்து பழக வேண்டும். அவர்களிடம் நஸீஹத் (உபதேசம்) பெற வேண்டும். தினமும் உடற்பயிற்சியில் ஈடுபடுவதோடு போசாக்கான உணவுப் பொருள்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். உற்சாக பானங்கள், ஆடம்பர உணவுப் பொருட்கள், உடையலங்காரம், பொழுதுபோக்குகள் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும். நாட்டுக்கும், சமூகத்துக்கும் பயன்தரக்கூடிய தொழிற் கல்வியைத் தேடிக் கொள்ள வேண்டும். நாம் தனித்து வாழ முடியாது. இணைந்து வாழ வேண்டும். அதற்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இதோ அல்லாமா இக்பால் இளைஞர்களுக்காகப் பாடுகின்றார்.

உள்ளத்தின் சோகப் பெருமூச்சின் வேதனையை
இளைஞர்களுக்கு அளிப்பாயாக!
எனது அன்பையும் ஆழமான தீட்சண்ய பார்வையையும்
அவர்களுக்குக் கொடுப்பாயாக!
எனது அதிகாலைப் புலம்பலை
இளைஞர்களுக்குக் கொடுப்பாயாக!
இளம் ராஜாளிக் குஞ்சுகளுக்கு
மீண்டும் இறக்கையைக் கொடு
இறைவா, எனக்கு ஒரே ஒரு ஆவல்
எல்லோருக்கும் எனது தீட்சண்ய பார்வையைக் கொடு!

ஆகவே இளமையை உரிய முறையில் பயன்படுத்தி நற்பேறடைவோமாக!

### பயிற்சி

பின்வரும் தொடர்களுக்கு விளக்கம் தருக.

1. ‘முதுமைக்கு முன் இளமையைப் பயன்படுத்து’
2. ‘நல்ல நண்பர்களையும், நல்ல முன்மாதிரிகளையும் இனங்காண வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கும் உண்டு’
3. ‘நவீன விஞ்ஞான தொழில்நுட்ப சாதனங்களை கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தப்பட வேண்டும்’
4. ‘இளமை வாள் போன்றது’